**Minutes of Public Hearing conducted on 25/11/2025 at 11:00 A.M. in Nambi Mahal, Madurai old bypass road, Gangaikondan, Tirunelveli District with respect to the Proposed Rough stone and Gravel Quarry by the Project Proponent Thiru.H.Amjad Pakkir Mohideen over an extent of 3.68.50 Ha in S.F. Nos. 976(Part), 977(Part) & 978(Part)of Chezhianallur Village, Manur Taluk, Tirunelveli District.**

**Details of participants in this meeting.**

1. Thiru.P.Valli Kannu - Assistant Commissioner (Excise), Tirunelveli
2. Er.D.M.Krishnababu.,M.E - District Environmental Engineer, TNPC Board, Tirunelveli.
3. Er.J.Jeya Priya.,M.E - Assistant Engineer, O/o.District Environmental Engineer, TNPC Board, Tirunelveli.

Public and Government Officials – 294 Nos (Copy of Attendance (Annexure-1))

The public hearing under EIA Notifications, 2006 for proposed Rough stone and Gravel Quarry by the Project Proponent Thiru. H.Amjad Pakkir Mohideen over an extent of 3.68.50 Ha in S.F. Nos. 976(Part), 977(Part) & 978(Part)of Chezhianallur Village, Manur Taluk, Tirunelveli District was conducted on 25/11/2025 at 11.00 A.M in Nambi Mahal, Madurai old bypass road, Gangaikondan, Tirunelveli District.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tirunelveli welcomed the Assistant Commissioner (Excise), Tirunelveli, public, Government officials and industry representatives who have attended the public hearing. He informed that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notifications, 2006. In this regard, public notices were already published in "Dinamalar" & "The New Indian Express" on 10/10/2025 and also announcement made to the public through vehicle announcement and distributing pamphlets.

He also stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA), Tamil Nadu for taking necessary action.

Also, he asked the project proponent to explain about the project to the public, and said that the public can express their opinions after the explanation.

Then the Environmental consultant of Project Proponent explained about the project of proposed Rough stone and Gravel Quarry by the Project Proponent Thiru. H.Amjad Pakkir Mohideen to the public through a Power Point Presentation.

Then, the District Environmental Engineer has requested the public to express their views one by one on the project orally or in writing and also informed that the public views are recorded and will be sent to the SEIAA, Tamil Nadu for taking necessary action.

Then, the Assistant Commissioner(Excise),Tirunelveli welcomed the public and has requested to express their views on the proposed project alone shortly and clearly.

Subsequently, the public has started expressing their views with respect to the project as follows.

**Mr. Ilayaraja, Mettuprancheri:-**

Mr. Ilayaraja, said that he has been working in this quarry for 6 years and that this quarry provides job for drivers and stone, gravel are available at low prices to the villagers, and therefore he welcomes this quarry.

**Mr. Pauldurai, Nellaithiruthu:-**

Mr. Pauldurai, said that stone and gravel used for construction work in his village are sourced from Thalaiyuthu and said that since this quarry is near his village, there will be no shortage of construction materials if this quarry comes to operation.

**Mr. Kumar, Keezha Chezhiyanallur:-**

Mr. Kumar, said that this quarry provides employment to his villagers and that stone, gravel and M.Sand materials will be easily available due to the presence of this quarry.

**Mrs. Jebakani, Ramanathapuram:-**

Mrs. Jebakani, said that she has been working as a volunteer in a NGO for many years. The quarry is improving the livelihood of the nearby village and is providing all kinds of benefits such as education facilities, drinking water facilities, road facilities, medical facilities, and employment. Therefore, she requested to provide a no-objection certificate to the quarry and welcome the quarry.

**Mr. Senthil, Gandhiswaranputhur, Chezhiyanallur :-**

Mr. Senthil, said that there are 470 people in his village and 300 houses. He said that many houses have cracked due to the blasting activity in quarry and he requested to inspect the same. He also said, that there is vibration in his village and there are lot of damage due to quarry operation and told that there are more than 50 agricultural wells in their village. He said that more quantity of explosives are being used every day and so cracks have occurred in the houses and requested the authorities to inspect it as all 470 people are affected by this. Since this quarry is located near his village, the villagers are affected by smoke and explosives, and that it should be inspected, and therefore he requested to ban the quarry.

**Mr. Raja, Itthikulam :-**

Mr. Raja, said that there are 400 houses in their villages, two quarries are already operating in their village, there is noise and vibration from the blast, and that the bricks of newly constructed houses in Itthikulam, Puthur and Chezhiyanallur areas are vibrating due to the vibrations, so he said that permission should not be given to the quarry.

**Mr. Perumal Thevar, Gandhiswaranputhur :-**

Mr. Perumal, requested that the quarry may be operated without harming their village and agriculture.

**Mr. Jayakumar, Gangaikondan :-**

Mr. Jayakumar, said that it is wrong to say that the peoples livelihood is improved and growing due to quarry. He said that the establishment of this quarry is not good for the people. He said that there was a quarry 100 meters away from their village near Netaji Nagar and the explosives used in the quarry were causing bricks of their houses to fall in their village. He also said that if you support this quarry and say that it will provide them with jobs and road facilities, your house will collapse. He said that the factories located in SIPCOT will benefit by providing employment without any harm, but it is wrong to say that we will be benefitted from the quarry by getting jobs. He said that the Minerals Rules of 1959 had stated what kind of explosives should be used and when to set the explosives. He also requested the officials to inspect the village near the quarry before giving approval.

**Mr. Madasamy, Gandhiswaranputhur:-**

Mr. Madasamy, said that this quarry is located 500 m away from his village and the houses in his village will vibrate when the quarry is blasted. He said that in the project presentation, it was said that the blasting would be done between 1-3 pm, but instead of following this, blasting was done at night and all required times and not done during festivals and not done when people are available in the village. He said that stones were falling on agricultural lands located near to the quarry and he had complained about it, but no action was taken. The livelihood of the people was being affected and due to the falling stones, the villagers are giving up agriculture and selling agricultural lands and requested to take appropriate action in this regard and stated that he is opposing this quarry.

**Mr. Senthil, Gandhiswaranputhur, Sezhiyanallur:-**

Mr. Senthil, while speaking again, he showed a photograph of his house affected by cracks in his mobile phone and said that despite of complaining about it 100 times, not even a single inspection was done by officials and questioned why this meeting held in Gangaikondan Panchayat instead of Sezhiyanallur village. He said that his village should be inspected, and many houses in his village have cracks and requested to inspect them.

As no other public came forward to record their views, the District Environmental Engineer said to submit written petition if any. After that, 370 numbers of written petitions were received in the public hearing meeting.

Finally, The District Environmental Engineer said that all the views informed will be recorded and will be submitted along with videography to State Environmental Impact Assessment Authority to take necessary action and thanked all the public attended the meeting.

The meeting came to an end.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Tirunelveli**

**Assistant Commissioner (Excise),**
**Tirunelveli**

**Annexure:**

1. Copy of Attendence ( Total - 28 Pages, 294 Participants)
2. Pendrive consisting of the Recorded Video of the entire public hearing.
3. Press release Notice (Tamil & English)
4. Written Petition received from the public for this proposed Project - 370 Nos

**திருநெல்வேலி மாவட்டம், மானூர் வட்டம், செழியநல்லூர் கிராமம், புல எண்கள். 976(பகுதி), 977(பகுதி) & 978 (பகுதி) விஸ்தீரணம் 3.68.50 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள திரு. H.அம்ஜத் பக்கீர் மொஹிதீன் அவர்களின் உத்தேசிக்கப்பட்ட கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்து 25/11/2025 அன்று முற்பகல் 11.00 மணியளவில் திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான், மதுரை பழைய பை பாஸ் சாலையில் அமைத்துள்ள நம்பி மஹாலில் வைத்து நடைபெற்ற பொது மக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

**இக்கூட்டத்தில் பங்கு பெற்றவர்களின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. P. வள்ளிக்கண்ணு, | – | உதவி ஆணையாளர் (கலால்),<br>திருநெல்வேலி. |
| 2. | திரு.து.மு. கிருஷ்ணபாபு, எம்.இ., | – | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருநெல்வேலி. |
| 3. | திருமதி.ஜே.ஜெய பிரியா, எம்.இ., | – | உதவி பொறியாளர்,<br>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருநெல்வேலி. |

மற்றும் பொது மக்கள், தொழிற்சாலை பிரதிநிதிகள் 294 நபர்கள் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.)

*********

திருநெல்வேலி மாவட்டம், மானூர் வட்டம், செழியநல்லூர் கிராமம், புல எண்கள். 976(பகுதி), 977(பகுதி) & 978 (பகுதி) விஸ்தீரணம் 3.68.50 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள திரு. H.அம்ஜத் பக்கீர் மொஹிதீன் அவர்களின் உத்தேசிக்கப்பட்ட கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்து 25/11/2025 அன்று முற்பகல் 11.00 மணியளவில் துவங்கியது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி அவர்கள் பொது மக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்க வருகை புரிந்த உதவி ஆணையாளர் (கலால்), திருநெல்வேலி அவர்களையும், கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு பங்கேற்க வந்த பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் அனைவரையும் வரவேற்றார். மேலும் இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006–ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். இந்த பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து 10/10/2025 அன்று "தினமலர்" மற்றும் "நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்ததை சுட்டிக் காட்டினார். அதன்பின் மக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்துவது தொடர்பாக பொது மக்களுக்கு கடந்த வாரம் துண்டு பிரசுரங்கள், வாகன பிராச்சாரம் மூலம் அறிவிப்பு செய்ததை கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்துக்கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவுசெய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு மேல் நடவடிக்கைகாக அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

தொழிற் திட்டம் தொடர்பான விளக்கங்களை, தொழிற் நிறுவனம் சார்பில் பொதுமக்களிடம் விளக்குமாறு கேட்டுக்கொண்டு, விளக்கத்திற்கு பின் பொது மக்கள் தங்கள் கருத்துகளை தெரிவிக்கலாம் என கூறினார்.

அதன்பின் திரு. H.அம்ஜத் பக்கீர் மொஹிதீன் அவர்களால் உத்தேசிக்கப்பட்ட கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாக புள்ளி விளக்க காட்சி (Power Point Presentation) மூலம் பொதுமக்களுக்கு விவரித்தார்.

அதனை தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொது மக்கள் இத்திட்டம் குறித்த தங்களது கருத்தினை வாய்மொழியாகவோ, எழுத்து பூர்வமாகவோ அளிக்கலாம் எனவும் திட்டம் குறித்த கருத்தினை கூற விரும்புகிறவர்கள் ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பெயர் மற்றும் ஊரினை விவரமாக தெரிவித்து தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

அதனை தொடர்ந்து உதவி ஆணையாளர் (கலால்), திருநெல்வேலி அவர்கள் பொது மக்கள் அனைவரையும் வரவேற்று, பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட கல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பான தங்களது கருத்துகளை மட்டும் சுருக்கமாகவும், தெளிவாகவும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட திட்டம் குறித்து, வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு,

**<u>திரு. இளையராஜா, மேட்டுபிராஞ்சேரி :-</u>**

திரு. இளையராஜா, அவர்கள் பேசுகையில் தான் இந்த கல்குவாரியில் 6 வருடங்களாக வேலைசெய்து வருவதாகவும், இந்த கல்குவாரியினால் கிராம மக்களுக்கு டிரைவர் வேலைகள், கல், ஜல்லி விலை குறைவாக கிடைப்பதாகவும், எனவே இந்த கல்குவாரியை வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

**<u>திரு. பால்துரை, நெல்லை திருத்து :-</u>**

திரு. பால்துரை, அவர்கள் பேசுகையில் தங்களது கிராமத்தில் கட்டுமான பணிகளுக்காக கல் மற்றும் ஜல்லிக்காக தாழையுத்தில் இருந்து கொண்டுவருவதாகவும், இந்த கல்குவாரியானது தங்கள் கிராமம் அருகில் உள்ளதால் கட்டுமானப் பொருட்கள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கும் என கூறினார்.

**<u>திரு. குமார், கீழ செழியநல்லூர் :-</u>**

திரு. குமார், அவர்கள் பேசுகையில் இந்த கல்குவாரியினால் தங்களது கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதாகவும், இக்குவாரி வருவதனால் கல், ஜல்லி மற்றும் எம்.சாண்ட் பொருட்கள் எளிதில் கிடைப்பதாகவும் கூறினார்.

**<u>திருமதி. ஜெபகனி, இராமநாதபுரம் :-</u>**

திருமதி.ஜெபகனி, அவர்கள் பேசுகையில் தான் ஒரு தொண்டு நிறுவனத்தில் தன்னார்வளராக பல ஆண்டுகளாக பணியாற்றி வருவதாகவும், இந்த கல்குவாரியானது அருகில் உள்ள கிராமத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதாகவும், கல்வி வசதி, குடிநீர் வசதி, சாலை வசதி, மருத்துவ வசதி, வேலைவாய்ப்பு மற்றும் அனைத்து வகையான நன்மைகளையும் செய்து வருவதாகவும், எனவே குவாரியை வரவேற்று தடையில்லா சான்று வழங்கும்படி கேட்டுக்கொண்டார்.

**<u>திரு. செந்தில், காந்திஸ்வரன்புதூர், செழியநல்லூர் :-</u>**

திரு. செந்தில், அவர்கள் பேசுகையில் தங்களது கிராமத்தில் 470 மக்கள் இருப்பதாகவும், 300 வீடுகள் உள்ளதாகவும் கூறினார். இந்த குவாரி இயங்கும் போது நிறைய வீடுகளில் விரிசல் விழுந்துள்ளதாகவும், அதனை ஆய்வு செய்யுமாறும், தங்கள் ஊரில் அதிர்வு வருவதாகவும் மற்றும் நிறைய பாதிப்பு உள்ளதாகவும், தங்கள் ஊரில் 50-க்கு மேற்பட்ட விவசாய கிணறுகள் உள்ளதாகவும் தெரிவித்தார். நாளுக்கு நாள் வெடி அதிகமாக வைப்பதாகவும் அதனால் வீடுகளில் விரிசல் விழுந்துள்ளதாகவும், அதிகாரிகள் அதனை ஆய்வு செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார், இதனால் 470

மக்களும் பாதிக்கப்படுவதாகவும், தங்களது ஊரின் அருகில் இந்த குவாரி உள்ளதால் புகை மற்றும் வெடியினால் பாதிக்கப்படுவதாகவும், அதனை ஆய்வு செய்ய வேண்டுமெனவும், எனவே குவாரிக்கு தடை கூறுவதாகவும் தெரிவித்தார்.

**<u>திரு. ராஜா, இத்திகுளம் :-</u>**

திரு. ராஜா, அவர்கள் பேசுகையில் தங்களது கிராமங்களில் 400 வீடுகள் உள்ளதாகவும், தங்களது கிராமத்தில் ஏற்கனவே இரண்டு கல்குவாரிகள் இயங்கி வருவதாகவும், வெடி சத்தம் மற்றும் அதிர்வு உள்ளதாகவும், இத்திகுளம், புதூர் மற்றும் செழியநல்லூர் பகுதிகளில் அதிர்வுகளால் புதிதாக கட்டும் வீடுகளின் செங்கல் அதிர்வதாகவும் தெரிவித்தார், எனவே குவாரிக்கு அனுமதி வழங்கக்கூடாது என கூறினார்.

**<u>திரு. பெருமாள் தேவர், காந்திஸ்வரன்புதூர் :-</u>**

திரு. பெருமாள், அவர்கள் பேசுகையில் தங்களது கிராமத்திற்கும் விவசாயத்திற்கும் பாதிப்பில்லாமல் குவாரியை நடத்திடுமாறு கேட்டுக்கொண்டார்.

**<u>திரு. ஜெயகுமார், கங்கைகொண்டான் :-</u>**

திரு. ஜெயகுமார், அவர்கள் பேசுகையில் அனைவரும் குவாரி வருவதால் தங்களது வாழ்க்கை திறன் மற்றும் பங்கீடு உயர்ந்து வளர்ந்து வருவதாக கூறுவது தவறான கருத்து என கூறினார். கல்குவாரி வருவதால் மக்களுக்கு நல்லது இல்லை எனவும், தங்களது கிராமத்தில் நேதாஜி நகர் அருகில் 100 மீட்டர் தொலைவில் குவாரி இருந்ததாகவும், குவாரியில் உபயோகிக்கும் வெடியினால் தங்கள் ஊரில் உள்ள வீடுகளில் செங்கல் விழுவதாகவும், மேலும் இந்த கல்குவாரியினால் தங்களுக்கு வேலை மற்றும் சாலை வசதி கிடைக்கும் என்று ஆதரவு தெரிவித்தால், உங்கள் வீடானது இடிந்து விழும் என்றார். சிப்காட்டில் அமைந்துள்ள ஆலைகளினால் எந்த வித கேடுகளும் இன்றி வேலைவாய்ப்பு பெறுவதால் நன்மை நடக்கும், ஆனால் இக்கல் குவாரியினால் வேலை கிடைத்து நன்மை பெறுவோம் என கூறுவது தவறானது. 1959-ல் கனிம விதிகளில் எந்த விதமான வெடி பொருட்கள் உபயோகப்படுத்தப்பட வேண்டும், எப்போது வெடி வைக்க வேண்டும் என விதிமுறைகள் உள்ளதாகவும் கூறியவர், அதிகாரிகள் குவாரி அருகில் உள்ள கிராமத்தை ஆய்வு செய்து ஒப்புதல் வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

**<u>திரு. மாடசாமி, காந்திஸ்வரன்புதூர், மானூர் தாலுகா:-</u>**

திரு. மாடசாமி, அவர்கள் பேசுகையில் இந்த கல்குவாரியானது தங்களது கிராமத்தில் இருந்து 500 மீ தொலைவில் உள்ளதாகவும், வெடி வைக்கும் போது தங்களது கிராமத்தில் உள்ள வீடுகள் அதிர்வதாகவும் கூறினார். திட்ட விளக்கத்தில் பிற்பகல் 1-3 மணியளவில் வெடி வைப்பதாக கூறியதாகவும், ஆனால் இதனை பின்பற்றாமல் இரவு நேரத்தில் வெடி வைப்பதாகவும், திருவிழா போன்ற நேரத்தில் வெடி வைப்பதில்லை எனவும், வெளியூர் சென்ற மக்கள் கிராமத்திற்கு வரும்போது வெடி வைப்பதில்லை எனவும், மக்கள் இல்லாத நேரத்தில் தினமும் ஒன்று முதல் 3 முறை வெடி வைப்பதாகவும் தெரிவித்தார். குவாரியின் அருகில் விவசாய நிலங்களில் கற்கள் விழுவதாகவும், அதற்கு புகார் தெரிவித்துள்ளதாகவும், ஆனால் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை எனக் கூறியவர், அதனால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும், கற்கள் விழுவதனால் விவசாயத்தை கைவிட்டு விவசாய நிலங்களை விற்பதாகவும், அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும், இந்த கல்குவாரிக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

**<u>திரு. செந்தில், காந்திஸ்வரன்புதூர், செழியநல்லூர் :-</u>**

திரு. செந்தில் அவர்கள், மீண்டும் பேசுகையில் தனது வீடு விரிசலால் பாதிக்கப்பட்டதை புகைப்படத்தோடு காண்பித்து, 100 முறை இது குறித்து புகார்

அளித்தும் ஒரு முறை கூட ஆய்வு செய்யவில்லை எனவும், இந்த கூட்டம் செழியநல்லூர் கிராமத்தில் நடத்தப்படாமல், கங்கை கொண்டான் பஞ்சாயத்தில் ஏன் நடத்தவேண்டும் என கேள்வி எழுப்பினார். தங்களது கிராமத்தை ஆய்வு செய்ய வேண்டும் எனவும், தங்களது கிராமத்தில் நிறைய வீடுகளில் விரிசல் விழுந்துள்ளதாகவும் அதனை வந்து ஆய்வு செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்.

அதை தொடர்ந்து, வேறு யாரும் கருத்துகள் கூற வராததால், எழுத்து பூர்வமான மனுக்கள் இருந்தால் அளிக்கலாம் என மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருநெல்வேலி அவர்கள் கூறியதை தொடர்ந்து 370 மனுக்கள் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் அளிக்கப்பட்டது.

இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருநெல்வேலி அவர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் அனைத்தும் முறையாக பதிவு செய்யப்பட்டு, அதன் குறிப்புகளும், வீடியோவும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு தக்க நடவடிக்கைக்கு அனுப்பப்படும் என்று தெரிவித்ததுடன் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

அத்துடன் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருநெல்வேலி

உதவி ஆணையாளர் (கலால்)
திருநெல்வேலி.

<u>இணைப்புகள்:</u>

1. வருகைப்பதிவேடு நகல் (மொத்தம் – 28 பக்கங்கள், 294 நபர்கள்).
2. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
4. கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் – 370 எண்ணங்கள்.